# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**ஆணை நாள். 08.07.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். CP 1496/F/2023(SA 9235/F/2023)**

திரு.வாராகி .. புகார்தாரர்

/எதிர்/

பொதுத்தகவல் அலுவலர் /
அரசு சார்புச் செயலாளர்,
நிதித்துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை-09. .. பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வாணையத்தில் இன்று 08.07.2026 நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு.வாராகி அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீடு நடைமுறைகள்) விதிகள், 2012 விதி 7(2)-ன்கீழ் மனுதாரர் ஆஜராக வேண்டுமென்பது அவசியமாகிறது. பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத்தகவல் அலுவலர் திரு.து.பெரியதுரை, அரசு சார்புச் செயலாளர், நிதித்துறை, தலைமைச் செயலகம், சென்னை-09 அவர்கள் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் 21.03.2023 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் தமிழக முதலமைச்சராக திரு.முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழக முதலமைச்சராக பொறுப்பேற்ற பிறகு தமிழக முதலமைச்சர் தலைமையில் இயங்கும் தமிழக பொருளாதார ஆலோசனைக் குழுவில் உள்ள நபர்களைப் பற்றி தகவல்களை 4 இனங்களில் கோரியுள்ளார்.

3. அம்மனுவை பெற்ற பொதுத்தகவல் அலுவலர் 18.04.2023 நாளிட்ட கடிதம் மூலம் தகவல் வழங்கியுள்ளார். இருப்பினும் மனுதாரர் தனக்கு சரியான தகவல் வழங்கவில்லை என மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, சட்டப்பிரிவு 18(1)ன் கீழ் 22.04.2023 நாளிட்ட புகார் மனுவினை ஆணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள புகார் மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு (08.07.2026) இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத்தகவல் அலுவலர், மனுதாரரின் 21.03.2023 நாளிட்ட மனுவிற்கு 18.04.2023 நாளிட்ட கடிதங்கள் வழியாக தகவல் வழங்கியுள்ளதாகவும் மேலும் மனுதாரரின் இதே பொருள் தொடர்பான 6(1) மனுவின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவிற்கு ஏற்கனவே 05.01.2026 அன்று SA 9235/F/2023 வழக்கின் மீது விசாரணை நடைபெற்று இவ்வாணையம் முற்றாக்கம் செய்துள்ளதாக கூறி அதற்கான ஆவணங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் பொதுத்தகவல் அலுவலரால் 18.04.2023 நாளிட்ட கடிதங்கள் வாயிலாக வழங்கப்பட்ட தகவல்களை உறுதி செய்தும் மேலும் மனுதாரர் ஒரே பொருள் சம்மந்தமாக இரண்டாம் மேல்முறையீட்டு மனு மற்றும் புகார் மனு போன்றவற்றை தாக்கல் செய்துள்ளதால் ஏற்கனவே தகவல்கள் வழங்கப்பட்டு இரண்டாம் மேல்முறையீட்டு மனு முற்றாக்கம் செய்துள்ளதன் அடிப்படையில் இவ்வாணையம் இப்புகார் மனுவின் மீதான விசாரணையை முற்றாக்கம் செய்து உத்தரவிடுகிறது.

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**
(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். CP 1496/F/2023**

**பெறுநர்**
**பொது அதிகார அமைப்பு**
பொதுத்தகவல் அலுவலர் /
அரசு சார்புச் செயலாளர்,
நிதித்துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை-09.

**மனுதாரர்**
திரு.வாராகி,
2/3, சுதானந்த பாரதி தெரு,
கணபதிபுரம் கிழக்கு தாம்பரம்,
சென்னை-600059.

Copy to file: KR/PA